## இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம்- 2015

---

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1982 இன் 09 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவன அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின்

நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03**

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரியதாக மீளாய்வாண்டின்போது கிடைக்கப்பெற்ற பெறுமதி முறையே ரூபா 9,124,036 மற்றும் ரூபா 17,942,843 தொகையான மதியுரைக் கட்டணங்கள் நியமத்தின் பிரகாரம் பின்னோக்கிய ரீதியில் சீராக்கம் மேற்கொள்ளப்படாது மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 93,773,720 கிரயமான

நிலையான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டவாறிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பீங்கான் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின்போது செலுத்தப்பட்ட ரூபா 1,015,270 தொகை முற்பணத்தின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக உரிய பொருள் கிடைக்கப்பெறாதிருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் நுகர்வுப் பொருட்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

ரூபா 27,656,085 கூட்டுப்பெறுமதியான கடன்பட்டோர் தொடர்பில் மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகள் முதல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உரிய அமைச்சிலிருந்தும் சில நிறுவனங்களிலிருந்தும் அறவிடவேண்டிய ரூபா 13,339,159 தொகையை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரச்சட்டத்தின் 13(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இரண்டாம் அடிப்படையில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவையில் சம்பளமற்ற உத்தியோகத்தர்கள் ஆனமையால் நிறுவனத்திலிருந்து விலகிச் செல்லும் போது கடன் மீதி தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், சேவையிலிருந்து விலகிய 04 உத்தியோகத்தர்களிடமிருந்து 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான கால வீச்சிலிருந்து அறவிடவேண்டியிருந்த ரூபா 418,527 தொகையான கடன் மீதியை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆலோசனைப் பாடநெறிகளில் விரிவுரைகளை நடாத்திய இணைப்பாளர்களினால் விரிவுரை நடாத்தப்பட்டதன் பின்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கை குறிப்பிட்ட வேளையில் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா 147,705,928 ஆகும். அதில் கூட்டுமொத்தமாக ரூபா 2,903,080 மீதி 05 வருடங்களை விஞ்சியிருந்ததுடன் ரூபா 40,488,585 கூட்டுத் தொகையான மீதி 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்டதாகும்.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1982 இன் 9 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவன அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு | நிறுவனத்தின் நோக்கங்களுக்கு முரணாக பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வெளிநிறுவனங்களின் பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் பரீட்சைகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 571 | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 வருடங்களை விஞ்சிய ரூபா 2,958,396 தொகையான பிடிகாசு மற்றும் வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2015 யூன் 26 ஆந் திகதிய 18/2015 ஆம் இலக்க அரச நிருவாகச் சுற்றறிக்கை | அரசாங்க சேவையின் நிறைவேற்று சேவைத் தொகுதியின் உத்தியோகத்தர்களுக்காக மாத்திரம் விஷேட படி செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் யூலை முதல் திசெம்பர் மாதம் வரை நிறுவனத்தின் 11 பதவிநிலை உத்தியோகத்தர்களுக்காக ரூபா 701,903 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2015 செப்தெம்பர் 17 ஆந் திகதிய எச்ஆர்/எப்ரீஆர்/எம்கிவ்யூ/12/15 ஆம் இலக்க அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சுச் செயலாளரின் (பதில் கடமை) கடிதம் | வெளிநாட்டு சுற்றுலா முடிவடைந்து நாட்டிற்கு வருகை தந்து மாதமொன்றிற்குள் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 08 உத்தியோகத்தர்களினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டாம் நிலைப்படியாக கல்விசார் பதவியணியினர்களுக்கு சம்பளத்தில் 50 சதவீதம் செலுத்துவதற்கு 2013 ஏப்ரல் 19 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் அந்த அமைச்சரவைத் தீர்மானத்தில் மேவுகை செய்யப்படாத இரண்டாம் நிலை அடிப்படையில் கல்விசாரா சேவைகளில் நிரந்தரமாக ஈடுபட்டுள்ள 10 பதவிநிலை உத்தியோகத்தர்களுக்காக 2014 ஏப்ரல் 23 ஆந் திகதிய எஸ்/ஏடீ/1/3/11 ஆம் இலக்க பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போது சம்பளத்தில் 50 சதவீதமாக ரூபா 2,516,398 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 02 வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பங்குபற்றிய 60 உத்தியோகத்தர்களுக்காக அந்த உத்தியோகத்தர்கள் சேவையாற்றிய நிறுவனங்களிலிருந்து நிகழ்ச்சித்திட்டங்களின் செலவினங்களுக்காக ரூபா 15,817,483 தொகை கிடைக்கப்பெற்றிருந்ததுடன் உணவு, தங்குமிடம், பாடநெறிக் கட்டணங்களுக்காக மாத்திரம் ரூபா 11,636,733 தொகை செலவிடப்பட்டிருந்தது. நிதி, திட்டமிடல் அமைச்சின் 01/2010/01 மற்றும் 01/2015/1 ஆம் இலக்க சுற்றறிக்கைகளுக்கு முரணாக எஞ்சிய தொகையான ரூபா 4,180,750 உரிய நிறுவனங்களுக்கு மீளச் செலுத்தாது உத்தியோகத்தர்களுக்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(இ) 2011 ஆம் ஆண்டு முதல் கிடைக்க வேண்டிய விடுதிக் கட்டணமாக கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 633,150 தொகை முறையான அங்கீகாரமின்றி பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் நிதி விளைவுகள் ரூபா 9,798,215 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 34,195,260 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 24,397,045 இனால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது மொத்தச் செலவினம் ரூபா 27,665,948 இனால் அதிகரித்திருந்த போதிலும், மீண்டெழும் மானியம் ரூபா 6,974,765 இனாலும், ஏனைய வருமானம் ரூபா 45,088,229 இனாலும் அதிகரித்தமை பற்றாக்குறை குறைவடைந்தது தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது. எவ்வாறாயினும், ஏனைய வருமானங்களின் அதிகரிப்பு தொடர்பில் அறவிடமுடியாக்கடன் மிகை ஒதுக்கமான ரூபா 12,028,934 தொகையினை சீராக்கம் செய்தமை காரணமாக அமைந்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்தபோது 2011 ஆம் ஆண்டில் ரூபா 640,761 தொகையான மிகை 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 14,875,471 பற்றாக்குறையாக மாற்றமடைந்து மீளாய்வாண்டின்போது ரூபா 9,798,215 வரை குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது 2013 ஆம்

ஆண்டில் ரூபா 69,040,146 தொகையான பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 125,405,149 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1982 இன் 09 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவன அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் பிரதான நோக்கங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) அரசாங்க உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ பணிகளை வினைத்திறன் மிக்கதாக நிறைவேற்றுவதற்குத் தேவையான புரிந்துணர்வு, திறமை மற்றும் நடத்தைகள் என்பவற்றை பயிற்சியின் மூலம் அபிவிருத்தி செய்தல்.

(ii) முகாமைத்துவம் மற்றும் அரசாங்க நிர்வாகத் துறைகளில் பயிற்சியளிக்கும் பாடநெறிகளை ஒழுங்கமைத்தல், பாடநெறிகள் தொடர்பில் சான்றிதழ் பத்திரங்கள் மற்றும் டிப்ளோமா கையளித்தல்.

(iii) அரசாங்க சேவை முழுவதிலும் செயற்திறனானதும் வினைத்திறனானதுமான நிர்வாகத்தை உறுதிப்படுத்தும் வகையில் மேற்பார்வை மற்றும் உதவிப் பதவியணியினரை முன்னேற்றுதல்.

(iv) முகாமைத்துவம் தொடர்பாக பல்வேறு இலக்குகளின் துறைகளில் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளல், கருத்துரை வழங்கல் மற்றும் விஷேட கையளித்தல்களுக்காக நிபுணர்களின் சேவையினைப் பெறுவதற்கு திட்டமிடல்.

(v) அரச துறையின் நிறுவனங்களுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட முகாமைத்துவ முறைமையை மீண்டும் கவனத்தில் கொள்வதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் உதவியாக இருத்தல், நிறுவன நடவடிக்கைகள், அனுமானங்கள், இழப்பீடு செலுத்தும் முறைமையைத் தீர்மானித்தல் போன்றவை தொடர்பாக அந்த நிறுவனங்களுக்கு உதவி வழங்குதல் மற்றும் அவற்றின் வினைத்திறனை அபிவிருத்திசெய்தல்.

(vi) இலங்கையிலும் வெளிநாடுகளிலும் முகாமைத்துவ பயிற்சியளித்தல், ஆராய்ச்சிகளை நடாத்துதல் தொடர்பான நடவடிக்கைகளின் போது ஏனைய நிறுவனத் தொகுதிகளுடனும் நபர்களுடனும் உளப்பூர்வமான ஒத்துழைப்புடன் நடவடிக்கை எடுத்தல்.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) விரிவுரை நிகழ்ச்சித் திட்டங்கள்

நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற விரிவுரையாளரொருவரால் மாதாந்தம் கட்டணம் அறவிடப்படாமல் ஆகக் குறைந்தது 45 விரிவுரை

மணித்தியாலங்கள் மேவுகை செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி ஆறு மாதங்களின் போது 13 விரிவுரையாளர்களினால் மேவுகை செய்யப்பட வேண்டிய ஆகக் குறைந்த 797 விரிவுரை மணித்தியாலங்கள் மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் ரூபா 713,300 தொகை அறவிட வேண்டியிருந்த போதிலும், அதில் ரூபா 369,045 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் மாதாந்தம் மேவுகை செய்ய வேண்டியிருந்த விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கையை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக, பயிற்சி மற்றும் விரிவுரை நிகழ்ச்சித் திட்டங்கள் வெளிவாரி விரிவுரையாளர்களைக் கொண்டு நிறைவேற்றப்பட்டு மீளாய்வாண்டில் 2131 விரிவுரை மணித்தியாலங்களுக்காக ரூபா 2,633,750 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) பயிற்சி நடவடிக்கைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) டிப்ளோமா பாடநெறிக்காக வருடாந்தம் தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை 2012 ஆம் ஆண்டின் போது 628 ஆக இருந்ததுடன் 2015 ஆம் ஆண்டு வரையில் அது 288 வரை குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும் பாடநெறியை விட்டுச்செல்கின்ற எண்ணிக்கை 2012 ஆம் ஆண்டில் 16 சதவீதமாக இருந்த போதிலும், அது 2015 ஆம் ஆண்டு வரையில் 26 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

(ii) முகாமைத்துவ மற்றும் முகாமைத்துவமல்லாத சான்றிதழ் பத்திர பாடநெறிகளைப் கைவிட்டுச்செல்லும் சதவீதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகரிப்பொன்றைக் காண்பித்ததுடன் அது மீளாய்வாண்டின் போது முறையே 62 சதவீதம் மற்றும் 47 சதவீதமாக இருந்தன.

பயிற்சி பாடநெறிகளை விட்டுச் சென்றமையின் காரணமாக ஏற்பட்ட விடயங்கள் நிறுவனத்தின் பரப்பெல்லைக்குப் புறம்பான விடயம் என பணிப்பாளர் நாயகத்தினால் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது.

## 4.2 செயற்பாட்டு விளைவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் மூலதன மானியத்தின் ஆரம்ப மீதி ரூபா 42,805,432 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான மூலதன மானியங்களிலும் 50 சதவீதத்தை விட குறைவான தொகை அதாவது ரூபா 51,549,835 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆண்டின் இறுதியில் எஞ்சியிருந்த மூலதன மானிய மீதி ரூபா 96,050,096 ஆகும்.

(ஆ) நிதி அமைச்சரினதும் உரிய அமைச்சரினதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் மூலதன மீதி மற்றும் நிறுவனத்தின் செயற்பாடுகளினால் உருவாகிய காசு மீதியையும் உள்ளடக்கியதாக 2016

ஆம் ஆண்டின் போது நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 100,000,000 தொகையொன்று மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் முதலீடாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**4.3 வெளிப்படையான மோசடிகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க துறையின் சிரேஷ்ட நிதி முகாமையாளருக்காக பெரிய பிரித்தானியாவில் நடைபெற்ற இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2015 யூன் 21 ஆந் திகதி முதல் 2015 யூலை 02 ஆந் திகதி வரை 11 நாட்கள் 22 உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர். அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2015 மே 15 ஆந் திகதிய எம்எப் 01/2015/01 ஆம் இலக்க நிதி அமைச்சுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாடு செல்கின்ற உத்தியோகத்தர்களுக்கு உரித்தான முழுமையான இணைந்த படியும் அமையப் படியுமாக ரூபா 18,899,159 தொகை அந்த உத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்ற நிறுவனங்களிலிருந்து பெறப்பட்டு அதில் ரூபா 6,191,691 தொகை பாடநெறிக் கட்டணம், விமானப் பயணச்சீட்டு மற்றும் நினைவுச் சின்னங்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 12,707,486 தொகை ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 577,612 வீதம் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ii) 2003 ஒக்தோபர் 28 ஆந் திகதிய பீஈடீ/17 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நியதிச்சட்ட சபைகளின் உத்தியோகத்தர்கள் உள்நாட்டு நிதியத்திலிருந்து மேற்கொள்கின்ற வெளிநாட்டுப் பிரயாணங்களுக்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இரண்டு வாரங்களுக்கு முன்னர் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், இந்த சுற்றுலாவில் பங்குபற்றிய நிறுவனத்தின் இரண்டு உத்தியோகத்தர்களுக்காக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

---

வன பாதுகாப்புத் திணைக்களத்திற்குரிய காணியொன்று சரியான பிரகாரம் கையேற்கப்படாமல் பயிற்சி நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு நிலத்தை தயாரிக்கும் நடவடிக்கைகளுக்காக முன்னைய ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 2,062,325 நடைமுறை வேலையாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இந் நிர்மாணங்களுக்காக தொடர்புடைய நிறுவனத்தின் அங்கீகாரம் கிடைக்காமையின் அடிப்படையில் நிர்மாணங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதனால் அந்தத் தொகையிலிருந்து நிறுவனத்திற்கு நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இலாபத்தில் அந்தச் செலவினத்தை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**4.5 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணியினர் 162 ஆக இருந்ததுடன், உள்ளபடியான பதவியணியினர் 110 ஆகும். அதில் 52 பதவிகளில் வெற்றிடம் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2013 ஏப்ரல் 19 ஆந் திகதிய அமப/13/0237/523/011 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இரண்டாம் நிலை அடிப்படையில் ஆட்சேர்க்கும் போது பகிரங்க அறிவித்தலின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு நிறுவனத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் சகல அங்கத்தவர்களையும் உள்ளடக்கிய நேர்முகப் பரீட்சை சபையொன்றின் மூலம் தகைமையுள்ளோரைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், ஆட்சேர்க்கப்பட்ட 10 பதவிநிலைப் பதவிகள் மற்றும் 08 பதவிநிலையற்ற பதவிகள் தொடர்பில் அந்த செயற்பாடுகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கை கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் நிதிக்கூற்றுக்கள் 174 நாட்கள் தாமதமாகி 2016 ஆகஸ்ட் 22 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்து திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2017 சனவரி 03 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று அமுல்படுத்தப்படுகின்ற போதும், பிரதான உள்ளகக் கணக்காய்வாளரும் ஒரு உத்தியோகத்தரும் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையினால் நிறுவனத்தின் ஒட்டுமொத்த நடவடிக்கைகள் தொடர்பாக போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படாதிருந்தமையும், வருடாந்த கணக்காய்வுத்திட்டம் எதிர்பார்த்த பிரகாரம் அமுல்படுத்தப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

**5.3 கொள்வனவுத் திட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 இன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (அ) வழிகாட்டியின் பிரகாரம் ஆகக் குறைந்தது மூன்று வருட காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகளை உள்ளடக்கி பிரதான கொள்வனவு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிதாகத் தயாரிக்கப்பட்ட கொள்வனவுத் திட்டத்தில் 07 காற்றுச் சீராக்கி இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,700,000 செலவினமொன்றைச் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 34 காற்றுச் சீராக்கி இயந்திரங்கள் ரூபா 7,532,369 செலவில் கொள்வனவு செய்யப்பட்டமையின் காரணமாக கொள்வனவுத் திட்டம் தேவைகளை இனங்காணாமல் தயாரிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.4 மற்றும் 5.2.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் வரைவு பாதீடு கணக்காண்டு ஆரம்பிப்பதற்கு 3 மாதங்களுக்கு முன்னர் கட்டுப்பாட்டுச் சபைக்கும், கணக்காண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் வரிசை அமைச்சிற்கும், பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் பாதீடு கட்டுப்பாட்டுச் சபைக்கு 2015 பெப்ரவரி 15 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளபடியான வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையே 27 சதவீதம் முதல் 1760 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்க பூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5.5 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டறிக்கை கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டு சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|---|
| | ---------------------------------------- | ------------------------------ |
| (அ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய பெறுமதிகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) | பொருட் பதிவேட்டு கட்டுப்பாடு | முறையான பொருட் பதிவேடு பேணப்படாமை |
| (இ) | பரீட்சை நடாத்துதல் | பரீட்சைப் பிரிவின் வெளிப்படைத்தன்மை மற்றும் இரகசியங்களைப் பாதுகாக்கும் வகையில் அந்தப் பிரிவு அமைக்கப்படாமை. |
| (ஈ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | பொருள் பெறுவனவுப் பத்திரம் விநியோகித்து உரிய பிரகாரம் புத்தகங்களுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) | செலுத்த வேண்டிய மதியுரைக் கட்டணம் | ஆண்டிற்குரிய மதியுரைக் கட்டணம் தொடர்பான கொடுப்பனவுகளை நடப்பாண்டின் போது தீர்த்து வைப்பதற்கான முறைமையொன்று ஸ்தாபிக்கப்படாமை. |